*குவலயம், 1° (kouvalaya), nénuphar, pontederia, nymphæa alba, lotus, nénuphar bleu. 2° (கு, வலயம்), la terre, le globe terrestre: குவலயத்திலேவழங்குகிறது être d'usage—, se rencontrer dans le monde.

*குவலயாபீடம், (குவலயம், *et* âpida, *qui comprime*, *ou* பீடம்), nom d'un éléphant, l'animal qui est un poids pour la terre, ou qui est censé la soutenir.

குவலீடம், (குவல், இடம்), ville.

குவலையன், vitriol bleu.

குவவு, accumulation, tas, foule, globe, boule, balle, terre, grandeur, ce qui est gros. [ம்.

குவளச்சி, minéral dit புத்தாம்பழ

குவளை, 1° (குவலயம்), nénuphar, pontederia, une des flèches de Kâmen, qui est de nénuphar. 2° (கு, வளை), œil, orbite—, creux—, angle de l'œil, ou canthus major, cou ou bord d'un vase, feuille représentée sur le கடுக்கன் ou pendant d'oreilles. *V.* பொக்கணி; —த்தாரகன் celui qui porte une guirlande de nénuphar, *i.e.* Darmarâsen; —யச்சு moule de nénuphar, instrument d'orfévre.

*குவாகம், (gouvâka), aréquier.

*குவாகுலம், (kouvahoula), chameau. [root, agutiguepa.

குவாக்கிழங்கு, ararout, ou arrow-

குவாட்டி, espéce d'huitre, —de moule.

குவால், (குவிகிறது), accumulation, foule, élévation, colline.

குவி, *imp. et part. du suiv.* entassé: குவியிலைமூக்கரிகத்தி couteau pour couper l'extrémité des feuilles de bétel entassées.

குவிகிறது, விந்தேன், விவேன், வி, விய, *v.n.* s'accumuler, s'entasser, se rassembler, se serrer, se réunir, se joindre, s'arrondir, se resserrer, se fermer (une fleur), se retirer, être rond, —renfermé.

குவிக்கிறது, வித்தேன், விப்பேன், வி, விக்க, *v.a. du préc.* accumuler, entasser, amasser, serrer, cacher, unir, joindre (les mains...), faire retirer, rétrécir.

குவிதல், *n.v. de* குவிகிறது, accumulation, tas, monceau, réunion, resserrement, retirement, rondeur.

குவித்தல், குவிப்பு, *n.v. de.* குவிக்கிறது.

குவியல், *n.v. de* குவிகிறது, monceau, tas, amas, contraction, rétrécissement.

*குவிரம், (kouvra), forêt, bois.

குவில், action de couper, bruit.

*குவிவாகம், (கு), mariage dégradant.

குவிவு, *V.* குவிதல.

Digitized by Google

சுவேற்றுமை. (கு), le cas terminé en கு, *i.e.* le datif.

குவை, (குவிகிறது), boule, balle, tas, monceau, foule, tertre, colline.

குவ்வாகுவ்வா வென்கிறது, (*son imitatif*), un enfant crier, crier comme un enfant.

குவ்வியம், plénitude.

குழ, *n.et adj.* jeune, tendre, enfant, jeunesse: குழகுழவென்றிருக்கிறது, *V.* குழகுழக்கிறது; குழமகன் petit enfant, poupon, poupée, le 77me பிரபந்தம், poème en calivemba, dans lequel les femmes exaltent le poupon qu'elles portent dans leurs bras.

குழகம், (குழ), beauté, beaux vers pour les enfans.

குழகன், (*id.*), le jeune fils—, le fils cadet de Siven, *i.e.* முருகன், Siven.

குழகு, (*id.*), beauté.

குழகுழக்கிறது, ழத்தேன், ழப்பேன், ழ, ழக்க, *v.n.* (குழ) *et* குழகுழத்தல், *n.v.* être flasque, mou, doux au toucher,—visqueux.

குழங்கல், espèce de guirlande.

குழந்தை, (குழ), *ou*—ப்பிள்ளை enfant, petit—, jeune enfant, poupon: குழந்தைக்குத்தாலாட்டுகிறது bercer un enfant et chanter pour l'endormir; —குழந்தையையரவணைக்கிறது embrasser—, caresser un enfant

குழப்படி, (குழப்புகிறது, அடி), *ou*

குழப்பம், (குழப்புகிறது), trouble, confusion, brouillerie, dissension, mutinerie, révolte rébellion, embarras (dans une affaire), difficulté, empêchement: —ஆயிருக்கிறது,—ஆய்க்கிடக்கிறது être en désordre, en révolte, en confusion, être troublé, embrouillé; —பண்ணுகிறது se révolter, exciter une révolte, troubler, bouleverser, retarder, empêcher; குழப்பக்காரன், குழப்பவாளி, (ஆளி), perturbateur, rebelle, brouillon, homme qui embrouille les affaires, qui bouleverse tout; குழப்பத்தைத்தீர்க்கிறது apaiser une révolte, des troubles, remettre en ordre.

குழப்பல், *opt.et n.v.de* குழப்புகிறது.

குழப்பன், (குழப்பம்), *V.* குழப்பக்காரன்.

குழப்புகிறது, ப்பினேன், ப்புவேன், ப்பு, ப்ப, *v.a.de* குழம்புகிறது, *et* குழப்பிப்போடுகிறது, —விடுகிறது *et* குழப்புதல், *n.v.* exciter des troubles, révolter, soulever, troubler, brouiller, embrouiller, bouleverser, embarrasser, mêler, mélanger, confondre: குழப்புகிறவன், *V.* குழப்பக்காரன்.

குழம்பல், *opt.et n.v.de* குழம்புகிறது, trouble, bouleversement, inversion, ce qui est liquide.

குழம்பு, 1° sauce, bouillon, jus, fluide épaissi,—épaissi en bouillant, eau de riz, cange, empois, mortier, argile—, boue pétrie pour bâtir, poudre de sandal etc... détrempée, chose liquide, mélange, Colombo, capitale de Ceylan, (et par extension) Ceylan. 2° *imp.et part.du suiv:* —காய்ச்சுகிறது faire une sauce, épaissir en faisant bouillir;—ப்பால் lait épaissi en bouillant.

குழம்புகிறது, பினேன், புவேன், பு, ப, *v.n.* (குழம்பு), குழம்புதல், *n.v.* s'épaissir, devenir épais, condensé, être trouble, troublé, confus, bouleversé, embrouillé, embarrassé, mêlé, liquide

குழலல், *V.* குழற்சி, excavation; *opt. et n.v.de*

குழலுகிறது, ழன்றேன், ழலுவேன், ழல், ழல, *v.a.et n.* (குழல்), குழலுதல், *n.v.* creuser, évider, boucler, rouler et nouer la chevelure derrière la tête, se friser, se mettre en rouleau, former un vide.

குழல், 1° tuyau, chose creuse, tube, mousquet, canon de fusil etc..., flûte, fifre, flageolet, chalumeau, chant harmonieux, chevelure—, cheveux de femme, touffe de cheveux, une des 5 manières d'attacher les cheveux, *i.e.* chevelure entortillée en rouleau par derrière,—nouée sur le côté, espèce de poisson. 2° *imp. et part.de* குழலுகிறது:—ஊதுகிறது jouer de la flute, etc...;—ஊதி joueur de flûte etc...—சுடுகிறது tirer un coup de fusil,—de canon.

குழவி, (குழ), pierre cylindrique, cylindre de pierre pour bro-

Digitized by Google

yer, âge tendre, jeunesse, tendreté, jeune arbre, plant, croissant de la lune (jusqu'au 8me jour), enfant, petit (des animaux et surtout) petit buffle, —bœuf sauvage, —élan, —cochon, —cerf, —lion, —léopard, —éléphant, —chameau, —écureuil ou rat palmiste, —singe ou autre animal qui vit sur les arbres, grandeur, dette.

குழவு (*id.*), âge tendre, tendreté.

குழவிழைப்புளி, *P.* குழைவிழைப்புளி. [boucle de cheveux.

குழற்கொத்து, (குழல்), touffe—,

குழற்சி, (குழலுகிறது), touffe—, boucle de cheveux, état de ce qui est bouclé, roulé—noué, —frisé.

குழற்பிட்டு, (குழல்), croquignole roulée (en forme de tube), pâte—, gâteau qu'on fait cuire dans un tube.

குழற்றுறப்பு, (*id.* துறப்பு), clef forée, —percée.

குழன்று, *gér. de* குழலுகிறது.

குழாம், (குழு), foule, assemblée.

குழாம்பல், chose liquide, molle, fanée, mélange.

குழாய், (குழல்), tube, tuyau, chose creuse, trou: குழாயாயிருக்கிறது être creux, —en forme de tube; குழாயில் வார்க்கிறது verser dans—, remplir un tube; குழாயில்வைக்கிறது mettre dans un tube.

குழி, 1° fosse, fossé, trou, creux, cave, puits, étang, ventre, tombeau, magasin, cougi, *i.e.* perche carrée contenant généralement 576 pieds carrés anglais, c'est le centième d'un kâni, carré, mésure quelconque carré. 2° *imp. et part. de* குழிகிறது *et de* குழிக்கிறது :—க்கணக்கு compte de cougis ou perches carrées; —க்கல் pierre creuse qui sert de mortier,— qui sert à broyer les drogues etc...; —க்குத்து trou fait pour transplanter des plantes;—க்குத்துக்கோல் petit bâton qui sert à faire ce trou;—சிலை, *P.* குளிசிலை;—ச்சட்டி sorte de terrine ou casserole creuse pour faire certaines pâtisseries;—த்தன்மை forme creuse;—த்தாமரை la plante ஆகாசத்தாமரை;—நரி renard (à tanière); —நாவல் espèce de நாவல் calyptranthes jambolana; —பறிகிறது un creux se former; —பறிக்கிறது creuser une fosse; மாறுகிறது multiplier des perches par des perches pour avoir des perches carrées: —மாறுதல் multiplication de perches carrées;— மாற்று table de multiplication—, multiplication de perches carrées;— முயல் lapin; —யச்சு instrument pour faire un creux dans les plaques de métal;—யம்மி pierre à broyer qui est creuse, *V.* குழிக்கல்;— யாகிறது, —யாதல் devenir creux, se creuser; —யாக்கிறது creuser, faire une fosse; —வெட்டி fossoyeur, homme qui creuse des fosses; —வெட்டுகிறது creuser une fosse; குழியிலேபுதைக்கிறது enfouir, cacher *ou* குழியிலேவைக்கிறது, enterrer, mettre dans la fosse.

குழிகிறது, குழிந்தேன், குழிவேன், குழி, குழிய, (குழி), se creuser, devenir—, être creux, concave: குழிந்தெடுக்கிறது se creuser le cerveau, creuser, être pensif, inquiet, examiner, chercher.

குழிகை, 1° *P.* குளிகை. 2° *n.v. de* குழிகிறது

குழிக்கிறது, குழித்தேன், குழிப்பேன், குழி, குழிக்க, 1° *v.a. de* குழிகிறது, creuser, faire une fosse. 2° *P.* குளிக்கிறது. [paume de la main.

குழிங்கை, (குழி, கை), creux—,

குழிசி, cruche, jarre, vase de terre à cuire le riz.

குழிதல், *n.v. de* குழிகிறது, se creuser etc..., *V.* குழிவு. [concave.

குழிந்த, *part. de* குழிகிறது, creux,

குழித்தல், *n.v. de* குழிக்கிறது.

குழிப்பு, espèce d'harmonie poétique qui consiste dans la correspondance des lettres d'un vers avec un autre. [écluse.

குழிமி, bec— , bouche d'un vase,

குழிமிட்டான், la plante நத்தைச் சூரி.

குழியம், balle, boule, forme cylindrique, gourdin recourbé usité dans les batailles, cercle.

குழிவு, *n.v. de* குழிகிறது, concavité, creux.

Digitized by Google

குழு, 1° foule, assemblée, troupe de femmes, collection, désobéissance. 2° *imp.et part.de* குழுவுகிறது: —க்காவி, —மாடு vache ou bœuf indomptable, —qui ne se laisse pas lier; —ப்பற்றுகிறது,—ப்பாய்கிறது courir çà et là par insubordination, être rebelle, indomptable.

குழுமல், foule, réunion, *n.v.de* குழுமுகிறது, மினேன், முவேன், மு, ம, *v.n. et* குழுமுதல், *n.v.* (குழு), se joindre, se réunir, s'attrouper.

குழுமுரல், espèce de poisson.

குழுவல், réunion, foule, *n.v.de* குழுவுகிறது, வினேன், வுவேன், வு, வ, *et* குழுவுதல், *n.v.* (குழு), *V.* குழுமுகிறது. [soumis, rebelle.

குழுவன், (குழு), désobéissant, in-

குழூஉக்குறி, (குழு, குறி), mot d'ordre, —de convention, jargon, langage, mot propre à une corporation, mot technique.

குழூஉப்பெயர், (*id.* பெயர்), nom collectif, —de corporation.

குழை, 1° tuyau, cannelure, chose creuse en dedans, sorte de pendant d'oreilles, oreille, ouïe, nénuphar, marne, boue, mortier, bourgeon, rejeton, feuillage, fumier de feuilles pourries, forêt. 2° *imp.et part. de* குழைகிறது, *et de* குழைக்கிறது: —க்கடுக்கன் espèce de pendant d'oreilles; —கறி sauce —, ragoût liquide, —trop cuit, —de fruits broyés; —க்காடு pays de forêts; —சாந்து, —சுண்ணம் mortier, chose détrempée et mélangée; —சேறு terre glaise—, boue détrempée, terre visqueuse, boue solide et infecte; —நாற்றம், —மணம் odeur de parfums mélangés, puanteur de la boue; — பிடிக்கிறது prendre une branche pour chasser quelque chose; — மறைவு cachette de feuillage.

குழைகிறது, ழைந்தேன், ழைவேன், ழை, ழைய, *v.n.* s'amollir, devenir mou, — mollasse, —comme de la bouillie, se fondre ensemble et ne faire qu'une masse, se gâter, se faner, se flétrir, languir, dépérir, plier, se mêler, se réunir, se joindre, s'assujétir servilement, s'associer par des motifs faux, se mêler: குழைந்துபோன சோறு riz trop cuit et réduit en bouillie அகங்குழைந்து போகிறது l'esprit être inquiet, troublé, languir, dépérir; இழையத்தீட்டிக்குழையவடிக்கிறது bien piler le riz dans un mortier, et le faire égoutter quand il est réduit en bouillie.

குழைக்கடிக்கிறது, (குழைக்கு, அடிக்கிறது), frapper avec certain feuillage en récitant quelque formule payenne.

குழைக்கிறது, ழைத்தேன், ழைப்பேன், ழை, ழைக்க, *v.a.* (குழை), bourgeonner, pousser, —des feuilles, amollir, faire trop cuire le riz, mêler, détremper, pétrir la terre, faire du mortier avec les pieds, plier.

குழைச்சி, (குழை), ruche ou nid des fourmis blanches.

குழைச்சு, poignée —, tête—, cou—, fourreau des instrumens, jointure, tenon, rainure, jointure intérieure des os des pieds, des mains etc...

குழைஞ்சான், (குழைகிறது), trouble, embarras.

குழைதல், *n.v.de* குழைகிறது.

குழைத்தல், குழைப்பு, *n.v. de* குழைக்கிறது, bourgeonnement, pousse, liquéfaction, amollissement, mélange, pli.

குழையடி, குழையடித்தல், (குழை, அடி...), action de frapper—, coup donné avec certain feuillage en récitant des formules gentiles et regardant fixément, ordre donné alors, enseignement.

குழையல் } *n. v. de* குழைகிறது,
குழைவு } amollissement, attendrissement, dépérissement, langueur, mélange, union, cannelure, courbure, *ou* குழைவாயிருக்கிறது être mou, mollasse, se flétrir, se faner, se gâter; குழைவிழைப்புளி rabot à cannelures, —pour creuser.

*குளகம், (koulaka), union de plusieurs stances, extension du régime des noms ou des verbes à plusieurs

Digitized by Google

strophes contrairement à l'usage de finir le sens à chacune, pièce de vers qui ne contient que des brèves, un marcal, *i.e.* la mesure dite மரக்கால், un ajâcou, *i.e.* un 8me de படி: குளகச்செய்யுள் pièce de vers de plusieurs strophes régies par un seul verbe.

*குளகன், (koulaka *de bonne famille*), le fils cadet de Siven, குமரன்.

குளகு, feuillée, nourriture des bêtes qui vivent de feuilles ou de plantes.

குளகுள, (*son imitatif*), son d'eau qui bouillonne etc...குளகுளென்கிறது *ou* குள்குளவென்கிறது, *V.* குளகுளக்கிறது: —வென்றழுகிப்போகிறது (un fruit) devenir mollasse, se pourrir: குளகுளவென்று *ou* குளகுளகொதிக்கிறது bouillir en faisant *coulacoula*: குளகுளவென்றுபோகிறது devenir mollasse,—mou.

குளகுளக்கிறது, ளத்தேன், ளப்பேன், ன, ளக்க, *v.n.* குளகுளத்துப்போகிறது, (குளகுள), faire *coulacoula*,—du bruit, répéter un son,— une syllabe.

குளசு, *P.* கொளுசு, nœud, nœud coulant, l'arsenic composé dit பவளப்புற்று, *V.* குழைச்சு: கால் —, கைக்குளசு jointure intérieure des os des pieds, —des mains.

குளச்சு, quart, *V.* குழைச்சு.

குளஞ்சி, *P.* கொளஞ்சி, espèce d'oranger, sucre.

குளத்தம், குளத்து, *obl. ou adj. de* குளம், d'étang: குளத்தங்கரை, குளத்தருகு, குளத்தோரம் bord d'étang; குளத்தேபோதல் aller aux besoins naturels.

குளம் 1° pièce d'eau, réservoir, étang (ordinairement carré). 2°* (koula), front. 3°* (goula), sucre, jagre ou sucre brut: —கட்டுகிறது faire—, bâtir un réservoir,—un étang;—தொடுகிறது, —தொட்டல், (et plus ordinairement), —தோண்டுகிறது, —வெட்டுகிறது creuser un étang; குளக்கட்டு bord d'étang;—கீழ் espace—, champ situé sous un étang;—க்குருவி moineau d'étang, *i.e.* crabe;—க்கொட்டி variété de la plante aquatique கொட்டி; —க்கோட்டன் nom d'un roi; —க்கோரை jonc d'étang, espèce d'herbe; —நண்டு crabe d'étang;—ச்செந்நெல், —நெல் riz des étangs, qui y croît de lui-même et dont les grains sont oblongs avec une barbe rude;—ப்பயறு espèce de pois; — ப்பாடு terre proche d'un étang;—மீன் poisson d'étang;—வடம்பு, (அடம்பு), certaine plante; —வட்டை, (அட்டை), sangsue d'étang;—வரகு espèce de வரகு qui croît dans les étangs;—வாழை espèce de riz, ou de nellou; குளத்துக்கு, —குளத்தேபோகிறது aller aux besoins naturels (c'est ordinairement sur le bord d'un étang); குளத்துக்குமழைகுந்தாணிபோற்பெய்கிறதா est-ce qu'il pleut gros comme des mortiers pour remplir les étangs; ce sont des gouttes multipliées qui les remplissent; de même ce sont les petites sommes multipliées qui rendent riche; கோயில்குளத்துக்குப்போகாதவன் celui qui ne va ni à la pagode, ni à l'étang (*i.e.* de la pagode, pour y faire des ablutions superstitieuses.)

குளம்பு, corne du pied (des animaux): இருபிளவானகுளம்பு corne du pied fendue.

குளவஞ்சி, *P.* குளாஞ்சி.

குளவி, guêpe, abeille, jasmin des montagnes, l'arbre மலைப்பச்சை:—குத்துகிறது, —கொட்டுகிறது la guêpe piquer;—க்கூடு nid ou ruche de guêpe;—புழுவைத்தன்னிறமாக்கிறதுபோல comme la guêpe change un insecte en sa propre couleur;—மண் boue avec laquelle les guêpes font leur nid.

குளவிந்தம், espèce de safran.

குளறல், *V.* குளறுகை.

குளறுட்டம், (குளறும், ஆட்டம்), trouble, confusion, embarras.

குளறுகிறது, றினேன், றுவேன், று, ற, *v.n. ou* குளறிப்பேசுகிறது, bredouiller, baîbutier, radoter, parler confusément, sans savoir ce qu'on

Digitized by Google

dit,se troubler, crier,faire du bruit; குளறிப்போடுகிறது embrouiller,embarrasser, troubler;— யடித்துக்கிடக்கிறது être dans un grand trouble, —embarras; —வழிகிறது parler indistinctement sans qu'on puisse comprendre.

குளறுகை,குளறுதல், *n.v du préc.* bredouillement,balbutiement,radotage,cri,bruit.

குளறுபடை, குளறுபிடி, குளறுபடி,(குளறும்), embarras, trouble qui fait balbutier, désordre:குளறுபடியாய்க்கிடக்கிறது rester confus,— à balbutier,—en confusion. [ger.

குளாஞ்சி,(குளஞ்சி),espèce d'oran-

குளாபாகம், *V.* குடாபாகம்

குளி,*n.v.imp.et part.de* குளிக்கிறது, *V.* குளிப்பு:— காரன் plongeur, pêcheur de perles,de conques etc...; —குளிக்கிறது être en couche, faire ses couches;—சீலை langoutti, morceau de toile qu'on met pour se baigner, *V.*கௌபீனம்;—தோஷம் maladie que contracte, dit-on,un enfant, quand sa mère ne s'est pas baignée après avoir visité sa voisine en couche;—நீர் eau pour se baigner;—ப்பச்சை *V.*ஆற்றுப்பச்சை;—மணி cloche de plongeur.

*குளிகசித்தி,*P.*குளிகாசித்தி.

*குளிகம்,(குளிகை),remède, médecine.

*குளிகன்,(koulika),un des 8 serpens qui,au dire des Indous, supportent le monde, une des planètes invisibles.

*குளிகாசித்தி, (குளிகை), prétendu pouvoir des pilules dites இரசகுளிகை,c'est un des அஷ்டசித்தி

*குளிகை,(goulika), pilule,boulette,bol,bolus,petit globe,boule, balle, remède,pilule médicinale, —magique composée de diverses sortes d'arsenics et de minéraux.

குளிக்கிறது,ளித்தேன், ளிப்பேன், ளி,ளிக்க,*v.n.* (குளி),se baigner,se laver le corps,plonger, pêcher les perles et les conques, s'enfoncer, se cacher,être caché: குளித்தெடுக்கிறது pêcher (les perles...).

குளிக்கை,*n.v.du préc.*

குளிசம், petit tube pour mettre un talisman ou chose semblable, amulette,talisman,petite plaque de métal sur laquelle on écrit des léttres magiques ou sacrées, cercle, anneau,—que l'on fait de quelques racines ou herbes pour des cérémonies superstitieuses: —கட்டுகிறது porter une amulette etc...;—ஆடுகிறது ou குளியமாடுகிறது mettre un anneau,—un tel anneau.

குளித்தல்,cachette, *V.*குளிப்பு.

குளிப்பாட்டு, குளிப்பாட்டுதல், *et.*

குளிப்பாட்டுகிறது, (குளிப்பு, ஆட்டுகிறது), laver (quelqu'un...), baigner,faire baigner.

குளிப்பிடபாறுகள், (குளிப்பு, இடம்,பார்),bancs où l'on pêche les perles.

குளிப்பு, *n.v.de* குளிக்கிறது, bain, plongeon,action de se baigner etc...

குளியம், (குளிசம்), globe, boule, remède en général,tigre.‖ *V.*குளிசம்.

குளியாள், (குளி, ஆள்), plongeur, pêcheur de perles. [dans l'eau.

குளியோடுகிறது, (குளி), plonger

குளிரி,paquet—, faisceau de plumes de paon,instrument,pour cueillir les feuilles de bétel et en couper la queue,la plante நீர்க்குளிரி.

குளிருகிறது,ர்ந்தேன், ருவேன், கு *ou* ர்,ர,*v.n.* (குளிர்), devenir—, être froid ou frais,avoir froid,frissonner, être rafraîchi, consolé,devenir roide, mourir: எனக்குக்குளிர்கின்றது j'ai froid; எனக்குமனங்குளிர்ந்தது mon esprit est tranquille,satisfait. (C'est ainsi que ce mot et ses dérivés signifiant la fraîcheur, donnent l'idée d'aise et de bonheur dans ce pays brûlant);சரீரமெல்லாங்குளிர்ந்தது tout le corps est froid,—est rafraîchi; எரியும்வயிறு குளிர்ந்தது l'estomac brûlant—,l'appétit est satisfait, je suis ou il est content, satisfait; என்வயிறுகுளிர்ந்ததுபோல உன்மாளிகைகுளிரவேண்டும் puisse ta famille être satisfaite comme mon estomac l'a été,(formule de remerciement); குளிரக்கொடுக்கிறது

Digitized by Google

donner à satiété, de manière à satisfaire: குளிரப்பண்ணுகிறது faire refroidir, rafraîchir, satisfaire; குளிர்ந்திருக்கிறது être froid, refroidi, frais, rafraîchi, satisfait, saisi du froid, transi, roide de froid: குளிர்ந்துகிடக்கிறது être étendu froid, roide, mort; —கொல்லி perfide, —qui tue ou dénigre avec un air affable et de belles paroles, la plante dite கொல்வை: —போகிறது devenir froid, raide, un froid mortel se déclarer, mourir; குளிர்ந்துபற்றுகிறது, குளிர்ந்தேறுகிறது le vent s'élever, un vent—, le poison monter.

குளிர், 1° *imp. part. fut. et n.v.de* குளிருகிறது. 2° *adj.* froid, frais, rafraîchissant. 3° froid, fraîcheur, temps rafraîchissant, vent froid et humide ou chargé de rosée, crainte, peur, signe de crainte, ordre des poissons (parce qu'ils ont le sang froid), rang de poissons, fronde, espèce de tambour, trident, massue, cognée instrument pour cueillir les feuilles de bétel et autres, et en couper la queue, porc-épic. *4° (koulira) crabe, signe du Cancer: —காய்கிறது, —காய்தல் se chauffer (au feu ou au soleil); —காய்ச்சல் fièvre avec frisson, fièvre froide: —காலம் l'hiver, la saison du froid; —காற்று vent froid ou frais; —குளிருகிறது, —கொள்ளுகிறது attraper du froid, devenir froid, roide, engourdi de froid, les symptômes empirer, —d'un froid mortel se déclarer; —சுரம் fièvre froide, —avec frisson; —த்தனம் froideur; —நடுக்குகிறது trembler—, frissonner de froid; —பனிக்காலம், —பனிக்காற்று temps —, vent de la rosée froide.

குளிர்கிறது... *V.* குளிருகிறது.

குளிர்க்கிறது, ர்த்தேன், ர்ப்பேன், ர், ர்க்க, *v.a.de* குளிர்கிறது, *V.* குளிர்ப்பிக்கிறது.

குளிர்ச்சி, குளிர்தல், *n.v.de* குளிருகிறது, fraîcheur, froid, froideur, frisson, roideur causée par le froid, mort: குளிர்ச்சியாயிருக்கிறது être frais, froid, rafraîchissant; —ப்பண்டம் chose fraîche, rafraîchissante

குளிர்த்தல், *n.v.de* குளிர்க்கிறது.

குளிர்த்தி, *n. v. du même*, fraîcheur, froid, frisson, adoration à la prétendue déesse du froid: —பண்ணுகிறது rafraîchir, faire refroidir, rendre froid; — போடுகிறது rendre hommage—, faire une offrande à la prétendue déesse du froid.

குளிர்ந்த, *part. parf.de* குளிருகிறது, froid, frais, rafraîchissant, refroidi, agréable: —குரல் voix douce, agréable; —கொள்ளி tison éteint ou qui le semble, médisant avec de belles paroles et un air de bonté. *V.* குளிர்ந்துகொல்லி; —நிறம் couleur agréable, délicieuse, qui rafraîchit les yeux; —நீர் eau fraîche, tiède, brillant des pierres précieuses; — பரிமளம் l'arsenic naturel சீதாங்கபாஷாணம்: —பார்வை regard favorable, —bienveillant; —பேச்சு paroles douces, affables; —மணம் odeur suave, agréable; —மனசு affection, esprit bien disposé; — முகம் visage bienveillant, affable, joli: —வசனம் paroles affables, amicales; — வாசனை odeur suave; —வாயு vent frais, flatuosité qui cause la froideur du corps; —வேளை moment du frais, la soirée; —வொளி (ஒளி), éclat brillant des pierres précieuses.

குளிர்ந்து, *gér.du même.*

குளிர்ப்பிக்கிறது, ப்பித்தேன், ப்பிப்பேன், ப்பி, ப்பிக்க, *v.a.de* குளிருகிறது *et* குளிர்ப்பித்தல், *n.v.* rafraîchir, rendre froid, faire refroidir.

குளிர்ப்பு, *n.v.de* குளிர்க்கிறது, *ou*

குளிர்மை, (குளிர், மை), fraîcheur, froideur, froid, maladie—, danger causé par le froid: —க்கட்டு fluxion, enflure à la joue; —காண்கிறது le froid de la mort se déclarer: —கொள்ளுகிறது attraper un coup de froid, s'enrhumer.

குளிறல், *n. v. de* குளிறுகிறது, bruit, retentissement, cri, les différens sons de la voix, —du discours, son inarticulé.

குளிறு, 1° bruit, son, grand bruit, cri. 2° *imp.et part.de*

Digitized by Google

குளிறுகிறது, றினேன், றுவேன், r று, ற, v.n. (குளிறு), குளிறுதல், n.v. faied u bruit, résonner, crier.

*குளீரம், (koulira), crabe.

குளுகுளு, (son imitatif), glouglou: குளுகுளென்கிறது, V. குளுகுளுக்கிறது; குளுகுளென்றுநீராடுகிறது l'eau agitée (dans un coco etc...), faire glouglou.

குளுகுளுக்கிறது, ளுத்தேன், ளுப்பேன், ளு, ளுக்க, v.n. (குளுகுளு), faire glouglou,—du bruit, résonner (l'eau dans un vase, dans un coco, dans le ventre), gagner—, avoir la jaunisse, être doux au toucher, se corrompre, se gâter par trop de maturité; குளுகுளுத்திருக்கிறது (la face) être enflée; குளுகுளுத்துப்போகிறது tomber en pourriture.

குளுகுளுப்பை, jaunisse.

குளுத்தி, P. குளிர்த்தி. [fraiche.

குளுநீர், P. குளிர்நீர், eau froide,—

குளுந்த, P. குளிர்ந்த.

குளுப்பை, espèce de jaunisse, leucophlegmatia, enflure:— முகம், - மூஞ்சி visage enflé;— மூஞ்சிக்காரன் homme dont la figure est enflée;— யாய்ப்போகிறது enfler.

குளுமி, écluse.

குளுமை, P. குளிர்மை.

குளைச்சு, P. குளச்சு.

குளைமான், espèce de cerf.

*குள்ளம், (khoulla), petitesse, petite taille, tromperie: குள்ளக்கெண்டை espèce de poisson, aphya.

*குள்ளன், (குள்ளம்), courtaud, nain, pygmée, trompeur, perfide: குள்ளனைக்கொண்டாழம்பார்க்கிறான் il fait examiner la profondeur de l'eau par un nain, il emploie une personne incapable; கள்ளன்பின்போனாலுங் குள்ளன்பின் போகப்படாது suivrait-on un voleur, qu'il ne faudrait pas suivre un nain, (suivant l'Indou superstitieux qui le croit de mauvais augure).

குள்ளி, 1° fém. du préc. femme courtaude, naine. 2° m. courtaud.

குற, adj. de குறம்: —ச்சாதி caste des குறவர் ou faiseurs de corbeilles etc...; — வேஷம் habillement—, mœurs et coutumes de cette caste.

குறங்கு, cuisse.

குறங்கொடடி, (குறங்கு, ஓட்டுகிறது), pièce de bois qui s'adapte à la picote [ம்), tison à demi-brûlé.

குறங்கொள்ளி, (குறம், P. குறையு

குறஞ்சனம், borax

குறஞ்சால், (குறம், P, குறையும், சால்), partie de terre qu'on n'a pas fini de labourer.

குறஞ்சி, la plante செம்முள்ளி.

குறடு, gén. குறட்டின், tenailles, pinces, pincettes, crabe, enclume, base, piédestal (de statues, de colonnes etc...) avance, saillie, proéminence, corniche, saillie inférieure et supérieure des murs et des colonnes, trottoir, banc de maçonnerie ou de terre autour des maisons, planche, élévation, pièce de bois, sandales de bois dites பாதக்குறடு, la cheville de ces sandales, une des courroies des sandales dites செருப்பு: குறடுவைத்து ou காய்ச்சிப்பிடுங்குகிறது pincer—, torturer avec des tenailles rouges; குறட்டாலிடுக்குகிறது prendre—, tenir avec des tenailles; குறடுள்ளோன், l'être qui a des pinces, i.e, le crabe. [le,

குறட்சி, (குறள்), petitesse de tail-

குறட்டரியம், (id. அரி), manque.

குறட்டாழிசை, (id. தாழிசை), sorte de poésie dont les strophes ont 2 vers. Il y en a de 3 sortes suivant les règles différentes qu'elles suivent.

குறட்டு, obl. de குறடு: —ச்செருப்பு espèce de sandales;— ப்பாக்குவெட்டி espèce de ciseaux pour couper la noix d'arec; —வேலை ouvrage en bosse, -ou en saillie.

குறட்டை, 1° acc. de குறடு. 2° ronflement, la plante trichosanthes palmata dont le fruit est médicinal:— யிழுக்கிறது,—வாங்குகிறது, —விடுகிறது ronfler.

குறண்டல், n.v. de குறண்டுகிறது, ce qui est roulé, ce qui s'est plié ou bosselé en se mettant en rouleau; —வாதம் flatuosité qui fait souffrir.

Digitized by Google

குறண்டி, 1° espèce de chant ou d'air. 2° *gér. du suiv.*

குறண்டுகிறது, டினேன், டுவேன், டு, ட, *v.n. et* குறண்டுதல், *n. v.* faire un pli — une bosse en se mettant en rouleau, se mettre en rouleau: குறண்டவாங்குகிறது tirer en mettant en rouleau.

குறத்தி, (குறம்), couratti, femme de la caste des குறவர் ou faiseurs de corbeilles, chiromancienne, diseuse de bonne aventure, montagnarde, femme chef d'un pays montagneux, la plante நிலப்பனை: —ப்பாட்டு le 85e des பிரபந்தம், pièce de poésie qui a rapport aux femmes de la caste des குறவர் ou diseuses de bonne aventure; குறத்திக்குக்கைகாட்டுகிறது montrer sa main à la குறத்தி pour demander la bonne aventure.

குறம், divination, pronostic, signe, espèce de chant, la caste des குறவர்: —பார்க்கிறது observer les signes, ou —விடுத்தல், — சொல்லுதல் dire la bonne aventure.

குறவஞ்சி, (குறம்), couratti, ou femme de la caste des குறவர், *V.* குறத்தி, espèce de chant, — de poème: — பாடுகிறது chanter ce poème.

குறவணவன், espèce de ver.

குறவன், (குறம்), *pl.* குறவர், homme de la caste des குறவர், faiseur de paniers, chasseur, montagnard, (sorte de gens qui s'occupent de petit trafic et sont assez généralement mal famés), *V.* வேடன், mercure: — பெட்டி panier, corbeille.

குறவை, —மீன் espèce de poisson de rivière, ophicephalus punctatus.

குறளடி, (குறள், அடி), vers de 2 pieds: —வஞ்சிப்பா poésie de l'espèce dite vangsi en vers de 2 pieds: — விருத்தம், —செய்யுள் nom d'un poème composé de vers de 2 pieds.

குறளன், (குறள்), courtaud.

குறளி, (*id.*), prostituée, espèce de diable: —க்கூத்து diablerie; —விடுகிறது déranger, troubler.

குறளை, (குறள்), 1° petitesse, —de taille, affront, injure, médisance, calomnie: —க்சொல், —மொழி injures, paroles outrageantes, — désobligeantes; —சொல்லுகிறது médire, injurier, dénoncer un vol, notifier les objets volés. 2° *acc. de* குறள்.

குறள், (குறு), petitesse, — de taille, chose courte, démon, espèce de fantôme, distique ou couplet de 2 vers, le premier de 4 pieds et le 2me de 3 pieds, poème moral fait par le fameux poète திருவள்ளுவர் et composé de cette espèce de distiques. (Il est divisé en 3 parties, savoir: அறத்துப்பால் traité de la vertu, பொருட்பால் traité des biens ou des richesses, காமத்துப்பால் traité du plaisir ou de la volupté; cette partie est dangereuse surtout pour la jeunesse). —வெண்செந்துறை strophe de 2 vers d'égale quantité: elle admet toute sorte de pieds et bien que le ton en soit défectueux, elle exige que le sens soit élégant: —வெண்பா petit vembà ou distique susdit de 2 vers qui suit une ou 2 sortes de combinaisons; les autres vembâ ont plus de 2 vers.

குறுசாணி, espèce de remède.

குறுகுகிறது, கினேன், குவேன், கு, வ, *v. n. ou* குறுகிப்போகிறது, maigrir, s'attrister, se rétrécir, se retirer, crier: குறுகியிருக்கிறது, குறுகிக்கொண்டிருக்கிறது, être maigre, triste, mélancolique.

குறுகுதல், *n. v. du préc.* maigreur, tristesse, retirement, cri.

குறுள், குறுளாடு, agneau, jeune brebis, chèvre qui n'a pas porté.

குறி, 1° *imp. de* குறிக்கிறது. 2° signe, marque, signal, signe de tête, —de la main, empreinte, caractère, qualité personnelle, spécialité distinctive, marque du sexe, apparence symptôme, signe avant-coureur, présage, augure, pronostic, divination par les signes, dire la bonne aventure, marque qu'on met aux bœufs et autres animaux, blanc, but, point de mire, estime, considération, bonne conduite, bon ordre, toile: குறிகாண்கிறது un signe etc... paraître, en voir un; —கெட்டவன் méchant, homme sans

Digitized by Google

loyauté: —க்கட்டு nœud distinctif que les marchands font pour distinguer le sac qui contient de l'argent; —க்காரன் homme de marque, augure, diseur de bonne aventure, habile tireur, —à viser; —கேட்கிறது consulter les devins, les augures; —கொள்ளுகிறது,—கொள்ளுதல் montrer, remarquer, distinguer; —க்கொள்வோர் étudians, ceux qui étudient les livres de religion, gens persévérans, déterminés à finir une chose; —க்கோள் persévérance, détermination à finir un ouvrage, convenence, estime, calcul;— சொல்லுகிறது pronostiquer, dire la bonne aventure;—சொல்லுதல் divination; —ச்சூத்திரம் règle pour désigner ou nommer;— தப்பாமற்போடுகிறது viser juste, tirer droit au but;—நிரை linéamens de la main qui servent de marques à la chiromancie; —நிலையணி fig. de rhét. qui consiste à désigner comme il faut l'objet qu'on loue sans le nommer;—பார்க்கிறது observer les signes, les augures, *ou*—பார்த்துச்சொல்லுகிறது dire la bonne aventure, exercer la chiromancie;— ப்பெண்டீர் devineresse; —போடுகிறது marquer (des habits etc...), mettre une marque;—ப்பட்டவன்,—மனிதன், —யானவன் homme distingué,—honnête,—de considération, notable; —யிடம் marque, l'endroit de la marque, marque et lieu, lieu désigné;—யிடையீடு manquer, être empêché de venir au lieu marqué, d'arriver au but;—யில்லாதவன் homme ordinaire, méchant, sans probité;—யீடு action de marquer, *V.* நாமதாரணை, imposition d'un nom; —யுள்ளவன், *V.* குறிப்பட்டவன்;—யெண் nombre concret,—dont l'espèce est désignée;—வைக்கிறது metre un but pour tirer; குறியைப்பார்த்துச்சுடுகிறது tirer au but, au blanc.

குறிக்கிறது, றித்தேன், றிப்பேன், றி, றிக்க, *v.a.* (குறி), marquer, désigner, nommer, assigner, destiner, montrer, mettre une marque, faire des remarques, noter, remarquer, se proposer, avoir en vue, estimer, tracer; அதற்குன்னைக் குறித்தேன் je vous ai désigné pour cela; இதிலவன் குறிக்கிறதென்ன quel dessein a-t-il en cela? que détermine ou désigne-t-il en cela? குறித்த நாளிலேவருகிறது venir au jour marqué; குறித்து, *gér. avec l'acc.* touchant, sur, à cause de, pour l'amour de, par égard pour: புண்ணியத்தைக்குறித்து sur la vertu, par rapport à la vertu; கடவுளைக்குறித்தாவது ஒம்வா viens au moins pour l'amour de Dieu; அதைக் குறித்துப் பேசினான் il a parlé sur cela; எழுதுகோலாலே குறித்துக்கொள்ளுகிறது marquer avec un pinceau; குறிதது வைக்கிறது se proposer, marquer, noter, mettre une marque,—une remarque.

குறிச்சி, village, hameau, bourg, village dans les montagnes, terminaison d'un grand nombre de noms de villages comme ஏலாக்குறிச்சி, கல்லங்குறிச்சி.

குறிஞ்சா, espèce de plante dont on distingue 2 sortes, la petite சிறு—periploca sylvestris qui est un contre-poison et la grande பெரு—asclepias vomitoria.

குறிஞ்சி pays—, terrain montagneux, champs dans un pays montagneux, —sur le penchant des montagnes, espèce de luth ou de ton du luth propre aux pays cultivés, air—, ton—, penchant des montagnes, espèce d'harmonie ou de musique, nom d'un grand arbre des montagnes, dattier sauvage dit ஈந்து, la plante செம்முள்ளி, l'arbuste மருதோன்றி, espèce de boîte:—க்கருப்பொருள் propriétés et productions d'un pays montagneux au nombre de 14, savoir: 1° —த்தெய்வம், —க்கிழவன், —வேந்தன் Soupramanien dieu prétendu des montagnes. 2°—த்தலைவன் chef d'un pays de montagne: on le nomme பொருனன், வெற்பன், சிலம்பன். Sa femme se nomme குறத்தி, கொடிச்சி. 3°—க்குடிகள், —நிலமக்கள் habitans des montagnes nommés இறவுளர், கு

Digitized by Google

றவர், கானவர்; —நிலப்பெண்கள் femmes des montagnes nommées குறத்தியர். 4° —ப்பறவை,— ப்புள் oiseaux des montagnes, le perroquet, le paon etc... 5°—விலங்கு, குறிஞ்சிக்குரியவிலங்குகள் bêtes sauvages des montagnes, le tigre, l'ours, l'éléphant, le lion etc... 6° —நிலத்தூர் villages des montagnes qu'on nomme சிறுகுடி ou குறும்பொறை. 7°—நிலத்துநீர் eau des montagnes: அருவி ruisseau qui en tombe et சுனை étang sur les montagnes. 8° —நிலப்பூக்கள் fleurs des montagnes,—des arbres suivans. 9°—மரம் *ou* குறிஞ்சிக்குரியவிருக்ஷங்கள் arbres des montagnes *i. e.* le வேங்கை, le குறிஞ்சி, l'arbre de sandal, le teck, l'agolloche அகில், le grand arbre dit அசோகு uvaria longifolia, la plante grimpante காந்தள், le புன்னை etc... 10°—யுணவு 'nourriture des montagnards: la graine du bambou dite மூங்கிலரிசி, 2 espèces de riz dites ஐவனம் et தோரை, le தினை ou millet, différentes sortes de racines, le miel, etc..; 11°—ப்பறை,—நிலப்பறை tambours des pays montagneux: le துடி et le தொண்டகம், 12°—யாழ்,— யாழ்த்திறம் le luth des pays montagneux. 13°—ப்பண்,—நிலத்திராகம் air ou ton des montagnes; 14°—நிலமக்களதுதொழில் occupations des montagnards, savoir: வெறிகொள்ளல் s'enivrer, semer le riz dit ஐவனம், garder le millet vert, tirer le miel des ruches, arracher des racines, se baigner dans les étangs des montagnes;—த்தினை choses propres aux pays montagneux, savoir: les monts, le froid, les premières rosées, l'obscurité, le riz ஐவனம், le millet தினை, la graine du bambou, des unions clandestines, des chefs nommés சிலம்பன், வெறபன், பொருப்பன், Soupramanien pour prétendu dieu tutélaire, des habitants nommés கானவர் et குறவர், du miel, des liqueurs enivrantes ou l'ivresse, des bourgades nommées சிறுகுடி et குறிச்சி, des ruisseaux dits அருவி, des étangs nommés சுனை, des éléphans, des paons, des arbres dits வேங்கை;— த்தினைப்பொருள், *V.* குறிச்சிக்கருப்பொருள்; —க்கிழவன்,—த்தெய்வம் *V. supra*;—த்தேர் char de triomphe fixe,—qui ne marche pas; —த்தேன் miel sauvage, —des montagnes;—நிலம் pays—, terrain montagneux;—நிலச்சார்பு penchant des montagnes, champs qui y sont cultivés;—ப்புறம், *V.* காந்தள்; —ப்பொருள் chose propre aux pays montagneux;— முதற்பொருள் choses principales des pays montagneux, savoir: pour place les montagnes et les lieux environnans, et pour le temps celui du froid, celui des premières rosées et le milieu de la nuit; —வேந்தன், *V.* குறிஞ்சித்தெய்வம்.

குறிஞ்சிலேக்கல், *P.* குறுஞ்சிலேக்கல்

குறிஞ்சில், l'arsenic préparé தொட்டிப்பாஷாணம்.

குறிது, *P.* குறியது.

குறித்த, *part. de* குறிக்கிறது, marqué, désigné, renommé: —கள்வன் voleur célèbre.

குறித்தல், *n. v. du même.* action de marquer etc..., désignation, destination, marque, intention, appréciation.

குறித்து, *gér. du même*, sur, touchant, à cause de, pour.

குறிப்பாளி, (குறிப்பு, ஆளி), personne qui distingue parfaitement, qui connaît bien les marques, les pronostics, physionomiste.

குறிப்பிசை, (*id.* இசை), son inarticulé.

குறிப்பிடம், (*id.* இடம்), abrégé, sommaire, compendium, catéchisme ou principaux articles de la doctrine chrétienne: சின்ன—, பெரியகுறிப்பிடம் petit—, grand catéchisme.

குறிப்பு, *n. v. de* குறிக்கிறது, marque, signe, signal, remarque, note, intention, dessein, désir, pensée, but, blanc (pour viser), espérance, attente, agenda, memorandum, abrégé, sommaire, modèle pour écrire, feuille de palmier sur laquelle on garde écrit le jour de la naissance, item, article de compte, union, concorde: குறிப்ப

Digitized by Google

டையாளம் marque, signe distinctif, abréviation; குறிப்பறிகிறது connaître les signes, marques, particularités ou circonstances; குறிப்பறிதல் connaissance des signes, des pronostics, physiognomonie, pronostic; குறிப்பறிந்தவன் habile dans la connaissnce des signes, des pronostics, physionomiste; குறிப்பாய்க்கேட்கிறது s'informer exactement d'une chose et de ses particularités; குறிப்பாய்ச்சில சொல்லுகிறது mentionner quelques points principaux; குறிப்பாய்ப் பார்க்கிறது considérer de près, remarquer, distinguer, marquer; குறிப்பானவன் homme distingué, recommandable, —de poids; குறிப்புரிச் சொல் mot d'indication, —désignant une qualité que l'esprit connaît et indique, *v.g.* நுண்மை la subtilité; குறிப்பெழுதுகிறது écrire un signalement, des signes, marques ou notes, écrire en abrégé; குறிப்புக்காரண வகத்தினை argument qui montre le but, —l'intention, *Ex.* பேருலகாள்யான் பிறந்ததாயின் பாருலகிழி நலம் பற்றிறக்கவோ si je suis né pour régner dans le ciel, dois je désirer et lécher les biens méprisables de la terre: -க்காரன் bon conseiller, *V.* குறிக்காரன்; — ச்செயல் du sens propre et de son amplification faire ressortir une autre signification; —ச்சொல் mot d'indication, —qui indique ou désigne une chose par quelque marque; —நவிற்சியணி figure qui parle par indication, qui dit une chose pour en indiquer une autre: —ப்பண்பு qualité et disposition de l'esprit, —qu'il connait et indique *v.g.* la sagesse, l'intelligence, le péché, la vertu; —ப்பொருள் chose indiquée —désignée par un குறிப்புச்சொல்: —மறிநிலை figure par laquelle on indique une chose différente du sens des mots; —வினை; —வினைப்பகுபதம் nom appellatif dérivé d'un nom d'objet, de lieu, de temps, de membre, de qualité ou d'emploi et que l'on conjugue en lui donnant les terminaisons du verbe, mais qui n'a qu'un temps et qui n'admet que le sujet sans régime direct, parce qu'il est renfermé en lui-même. *Ex.* de பூண் bijou on fait பூணினேன் j'ai un bijou, de நல் bon on fait aussi நல்லேன் je suis bon.

குறிப்பெஞ்சணி, குறிப்பெச்சம், (குறிப்பு), ellipse du mot d'indication.

குறிப்போலை, (*id.*) feuille de palmier sur laquelle on a marqué quelque chose, —sur laquelle on a écrit un horoscope.

குறிய, *adj. de* குறுமை, bref, court, abrégé, petit: குறியன், *m.* courtaud: குறியள், *f.* courtaude; குறியது chose petite, courte: குறியர் *pl.* courtauds.

குறில், (குறுமை), brève, lettre brève, chose courte.

குறு, *adj de* குறுமை, court, bref, petit, abrégé: —நகை sourire; - நகை கொள்ளுகிறது, — நகை செய்கிறது sourire; —நடை marche chancelante; —நிலம் petit pays, —champ; —நிலத்தரசன், —நிலமன்னன், —நிலவேந்தன், *V.* அரட்டன் et குறும்பன்; —நிலமன்னரூர்மா cheval de petits rois; -நெல் riz concassé; —நெளிப்பு orgeuil, mouvement —, air de fierté; —நொய் riz concassé; —மணல் sable fin, - mêlé d'argent; —மலை petite montagne; —மன்னன் petit prince; —மன்னியம் caractère colère, — difficile, tel que celui des petits princes; —மாக்கள், —மக்கள் enfans, petits enfans, jeunes gens; —மீன் espèce de —, petit poisson; —மிழி, —முழி regard effaré, —de travers, colère, petit œil; -முட்டு proximité, approche, stupidité; —முரல் sourire; —முனி le sage ou pénitent courtaud, *i.e.* le célèbre Agastien; — வாழ்க்கை pauvreté, peu de bonheur; —விசாரம் inquiétude, tristesse, mélancolie; — விசாரமிடுகிறது peiner, affliger, *ou* — ஆயிருக்கிறது être triste, inquiet, pensif, en peine; —விலை cherté, disette; —விலைக்காலம் temps de famine; —விழி *V.* குறும்பார்வை; —விழிக்கொள்ளுகிறது, —விழிவிழி

Digitized by Google

க்கிறது avoir la regard effaré,—farouche;—வேர்வு,—வேர்வை moiteur du corps,sueur faible,—de frayeur; —வேர்வரும்புகிறது, —வேர்வாடுகிறது la sueur paraitre,—commencer à venir.

குறுக,*inf.de* குறுகுகிறது,proche.

குறுகலர்,(குறுகு,அலர்),ennemis, gens qui ne s'approchent pas.

குறுகல்,*n.v.de* குறுகுகிறது, proximité,voisinage, petitesse,brièveté, manque, contraction; —ஆயிருக்கிறது être bref,court,proche.

குறுகிக்கிறது,கித்தேன்,கிப்பேன், கி,கிக்க,*v.a* (குறு),*et* குறுகித்தல், *n. v.*regarder de près,d'un air effaré,de travers (par colère ou autrement), —d'un œil farouche.

குறுகு,*imp.et part.du suiv.*:—த்தாளி la petite espèce de தாளி.

குறுகுகிறது, *sync.* குறுகிறது, கினேன்,குவேன்,கு,க,*v.n.* குறுகுதல், *n.v.*(குறுமை), diminuer, décroitre, s'amoindrir, se rétrécir, se raccourcir,se contracter,devenir court,bref, être abrégé,abaissé, s'approcher, approcher: குறுக, *inf.* auprès, près; குறுகக்காய்ச்சுகிறது réduire par l'évaporation un liquide à une petite quantité en le faisant bouillir;—ப்பண்ணுகிறது, *V.* குறுக்குகிறது;—ப்பிடி prends tout près, ou plus près; குறுகி யிருக்கிறது être court, proche;—வருகிறது s'approcher.

குறுகிய, *part.* bref, court, raccourci, contracté, diminué etc...;—மாத்திரை quantité d'une brève.

குறுகுறு, (*son imitatif*), *courou-courou*: குறுகுறென்கிறது, *ou* குறுகுறென்றிழுக்கிறது,les oreilles tinter,faire du bruit comme le phlegme dans la gorge des mourans, *V.* குறுகுறுக்கிறது: குறுகுறென்றுமிழிக்கிறது regarder d'un air effaré,comme un voleur: குற்றமுள்ளநெஞ்சுகுறுகுறென்னும், குறும்பியுள்ளகாதுகினவுகின்னும் une conscience coupable cause la mélancolie et une oreille pleine de cérumen, des démangeisons.

குறுகுறுக்கிறது,றுத்தேன், றுப்பேன்,று,றுக்க,*v.n.* (குறுகுறு),*et* குறுகுறுத்தல், *n. v.*se faner, s'inquiéter, être pensif, mélancolique, inquiet, irrité, fâché, faire *courou-courou*,—du bruit.

குறுகுறுப்பு,*n.v.du préc.* signe de colère,colère,inquiétude,*ou*

குறுகுறுப்பை,(*id.*),ronflement.

குறுகுற்றுளி,*P.* குறுகுத்தாளி.

குறுக்கடி,(குறுக்கு,அடி), raison opposée, —qui vient à la traverse, chemin de traverse.‖*V.* குறுக்களவு.

குறுக்கம், *n.v.de* குறுக்குகிறது, ce qui est court,—bref,—raccourci, l'arsenic naturel கௌரிபாஷாணம், *ou*

குறுக்கல்,*n.v.du même*, contraction, abréviation, diminution, action de raccourcir, de rendre bref etc...; விகாரம் changement d'une longue en brève.

குறுக்களவு,(குறுக்கு,அளவு),diamètre,mesure prise à la traverse,—au milieu.

குறுக்கி,*gér.de* குறுக்குகிறது.

குறுக்கிடுகிறது,(குறுக்கு,இடுகிறது),croiser,traverser, passer à travers,au milieu, contre-carrer, s'approcher:பூனைகுறுக்கிட்டது le chat a croisé le chemin,(ce que les Indiens superstitieux regardent comme un mauvais augure, au figuré) l'entreprise a été traversée,—arrêtée; குறுக்கிட்டுமறிக்கிறது contrarier, contre-carrer,empêcher, obstruer.

குறுக்கிறது,1° றுத்தேன், றுப்பேன்,று,றுக்க, *v. n. V.* குறுகுகிறது. 2° *sync.de* குறுக்குகிறது.

குறுக்கு,1°*imp.et part.de* குறுக்குகிறது.2° traverse, diamètre, diagonale,ce qui est à travers, par le travers,empêchement,milieu, petitesse, contraction,abrégé, os des reins,douleur des reins,sciatique: குறுக்கிடாகப்போகிறது croiser, traverser,passer à travers,contre-carrer;—க்கட்டு toile ou chose semblable liée en travers à la poitrine;—க்கேள்வி interrogation captieuse, —lancée à la

Digitized by Google

traverse;—ச்சட்டம் traverse, pièce de bois mise en travers; —ச்சார் petite digue à travers une rivière pour prendre au filet le poisson à l'ouverture qu'on y laisse; —ச்சுவர் mur de traverse; —ச்சூத்திரம் règle abrégée,—facile à apprendre;—த்தடி,—த்தாள் barre de porte ou de fenêtre,bâton en travers; —தோய் mal de reins,sciatique;—ப்பலகை planche en travers;—ப்பாடு, *V.* குறுக்கு *et* குறுக்களவு; —ப்பாதை chemin de traverse; —ப்புத்தி esprit de contradiction,de travers, sans réflexion;—ப்பேச்சு contradiction, paroles qui interrompent, riposte;—மறுக்கு opposition réciproque,désordre;—வரி diamètre, diagonale;—வழி chemin de traverse; —வரிச்சு perches liées en travers sur un toit pour soutenir la paille;—வளை,—விட்டம் traverse,chevron,poutrelle en travers;—விசாரணை, —வினாசோதனை perquisition—, interrogatoire captieux,qui vient à la traverse;—விழுகிறது tomber en travers, —dedans,survenir,la traverse tomber;—வெட்டி chemin de traverse; குறுக்கானை traversier, de—, en travers, diamétral,diagonal; குறுக்காய் en travers,diamétralement, diagonalement;குறுக்கே de travers,à la traverse; குறுக்கேபேசுகிறது interrompre (celui qui parle), contredire; —போகிறது, —வருகிறது aller —,venir à la traverse;கும்பிடப்போனதெய்வங்குறுக்கேவந்ததுபோல நீ வந்தாய் ton arrivée est comme si la divinité que j'allais adorer fut venue à ma rencontre, *i. e.* je suis charmé de te voir.

குறுக்குகிறது,*sync.* குறுக்கிறது, க்கினேன்,க்குவேன்,க்கு,க்க, *v.a. de* குறுகுகிறது *ou* குறுக்குதல், *n.v. et* குறுக்கிப்போடுகிறது, raccourcir, diminuer, rétrécir, faire une contraction,une syncope,rendre bref;குறுக்கிச்செலவழிக்கிறது, —ப்போடுகிறது diminuer la dépense, économiser.

குறுக்கையர், nom d'une caste de வேளாளர்.

குறுங், *P.* குறும் *devant* க: —கணக்கு lettres simples, *i.e.* les voyelles அ,ஆ etc... et les consonnes sans voyelle, comme க், ங், ச்..., compte abrégé,—petit;—கண் fenêtre,petite fenêtre,œil-de-bœuf,petit œil; —கண்வலை filet à petites mailles; —கவி luth—, ton propre aux terrains stériles, espèce de poème où des femmes médisent en présence de l'amant;—கற்றலை espèce de poisson; —காசு petite cache,espèce de cache ou de monnaie;—காடு petit bois, broussailles,taillis;—கிண்ணி bronze, petit vase de cuivre;— குடியாள் orpiment;—கோல் bâton court, verge, bâton, mesure de 2 coudées; —கோல் வேந்தன் petit roi.

குறுஞ், *P.* குறும் *devant* ச்: குறுஞ்சார், *V.* குறுக்குச்சார்; —சாலி jeune arbre;—சிரிப்பு sourire;—சிலைக்கல் espèce de minéral ou pierre rouge dite ஈரக்கல்; —சீர்வண்ணம் pièce de vers composée de brèves; —சுனை petit étang.

குறுஞ்சா, *V.* குறிஞ்சா.

குறுணல்,la mesure dite குறுணி.

குறுணி, ce qui est petit, crouni ou marcal,c'est la mesure dite மரக்கால்,le 12me d'un கலம் contenant généralement 8 படி ou நாழி (mais seulement 4 à Pondichéry.);la marque du குறுணி est ௩.Quand il y en a plusieurs les noms et les marques varient,ainsi:2 குறுணி se nomment பதக்கு,௨; 3 குறுணி-முக்குறுணி, ௩; 4 குறுணி தூணி, ௪; 5 குறுணி - ஐங்குறுணி, ௫; 6 குறுணி - தூணிப்பதக்கு, ௬; 7 குறுணி-எழுகுறுணி, ௭; 8 குறுணி - இரு தூணி, ௮; 9 குறுணி - இரு தூணிக்குறுணி,௯; 10 குறுணி - இருதூணிப்பதக்கு, ௰; 11 குறுணி - இரு தூணி முக்குறுணி, ௰௧; 12;குறுணி-கலம்,௱:பானையிலேபதக்குறெல்லிருந்தால் மூலையிலே முக்குறுணி தெய்வங்கூத்தாடும் s'il cuit dans le pot 2 crounis de riz, 3 crounis de

Digitized by Google

dieux danseront dans un coin de la maison, *i.e.* les gens imprévoyans se réunissent pour dépenser tout d'un coup ce qui devait servir à plusieurs jours et ensuite ils sont dans la misère.

குறுணை, (குறு), riz concassé.

குறுதல், *P.* குற்றுதல், cueillir.

குறுத்தல், *n.v.de* குறுக்கிறது.

குறுந், *P.* குறும் *devant* த், court, petit, bref, abrégé:—தடி bâtonnet, bâton court, houssine pour fouetter un cheval, baguette de tambour etc...; —தறி chapiteau de bois, *V.* குறுந்தடி; —துணி morceau de toile; துழாய், —துளசி la plante சிறுதுளசி;—தெரு rue courte;— தேங்காய் le fruit dit சமுத்திராபழம்;—தொட்டி petit bassin, l'espèce d'ortie—, la plante சிறுகாய்ஞ்சொறி, l'arbuste சிற்றமட்டி.

குறுப்பி, *V.* பொன்னிமினை.

குறுமை, (குறு), petitesse, brièveté, diminution, abréviation, abrégé, péché, beauté; *l'adj.* est குறிய, குறு, குறும், குற்று,

குறும், *adj.de* குறுமை, court, bref, petit, abrégé: — பயிர், moisson en herbe;—பார்வை regard farouche,— effaré, —colère, —effrayé; —பொறை bois, forêt, village de pays montagneux, montagne, colline; —பொறைநாடன் chef d'un pays de forêts

குறும்பச்சி, குறும்பிச்சி, *f.de* குறும்பன், femme de la caste des குறும்பர்.

குறும்பன், *pl.* குறும்பர், (குறும்பு), pâtre, homme de la caste des bergers qui tissent des கம்பளி, homme bourru, méchant, roi d'un petit pays.

குறும்பாடு, (*id.* ஆடு), brebis à laine et à cornes en spirale. ‖ *V.* பள்ளையாடு.

குறும்பாட்டம், (*id.* ஆட்டம்), méchanceté, mauvais caractère:—ஆடுகிறது, — செய்கிறது faire le —, être méchant.

குறும்பி, (குறும், பி), cire des oreilles, cérumen: —வாங்குகிறது curer les oreilles;—வாங்கி cure-oreille.

குறும்பிடி, (குறும்), petite scie,— épée, poignard, petit manche, saisir fortement.

குறும்பிடையன், (குறும்பு, இடையன்), pâtre, berger de la caste des குறும்பர்.

குறும்பு, méchanceté, malice, mauvaise humeur, mal, méfait, combat, village de désert ou de pays stérile, forteresse, petitesse: — க்காரன், *V.* குறும்பன்;—த்தனம் méchanceté; — த்தனம் பண்ணுகிறது faire le —, être méchant; — வன்னியை subdivision de la caste des Pallis ou Vanniers;—வன்னியன் homme de cette classe. [க்), caille.

குறும்புள், *et corr.* குறும்பூழ், (குறு

குறுவால், (குறு, ஆல்) ,l'arbre dit ficus virens.

குறுவிக்கிறது, வித்தேன், விப்பேன், வி, விக்க, *v.n.et* குறுவித்துப்பார்க்கிறது, *V.* குறுகிக்கிறது.

குறுஞுத்தகடு, குறுஞுப்பட்டை, lame de métal dorée, papier doré en clinquant et qui sert d'ornement.

குறூரம், *P.* குரூரம்.

குறை, 1° manque, besoin, défaut, imperfection, chose défectueuse, — non pleine, faute, erreur, égarement, pauvreté, vide, impôt, tribut du roi, reste, surplus, mécontentement, indignation, aversion, supplication 2° *imp. et part. de* குறைகிறது *et* குறைக்கிறது: — குடம் cruche non entièrement remplie;—கொள்ளுகிறது mendier; - கொள்ளுதல், —கொள் mendicité; — க்கண்ணுக்குறங்குகிறது ne dormir que d'un œil; — க்காடு petite forêt; —க்கிராமம் petit bourg; — கோபுரம் pyramide tronquée,—imparfaite;—க்கொள்ளி petit tison, bout de tison; —சொல்லல் plainte; — சொல்லுகிறது se plaindre, dire les défauts; —தீருகிறது un défaut—, un besoin cesser, être content, satisfait, ne manquer de rien;—தீர்க்கிறது, *V.* குறையாற்றுகிறது;—த்தலை, —த்தலைப்பிணம் tronc sans tête; — நிறை plus ou moins, environ, l'un portant l'autre, terme

Digitized by Google

